# கண் ஒளி

விழி 35 | பார்வை 04 | நவம்பர் 2018



ARAVIND EYE CARE SYSTEM

aurolab

# Regained precise vision!

துல்லியமான பார்வையை மீண்டும் பெற்றேன்!
கண்ணாடிக்கும் குட்-பை சொல்லி விட்டேன்!



# Goodbye Spectacles

*(High spectacle independence)*

கண்புரை அறுவை சிகிச்சைக்குப் பின், கண்ணாடி அணியாமலே துல்லியமான பார்வை பெற அரவிந்த் கண் மருத்துவமனையை அணுகவும்.

கண் ஒளி

அரவிந்த் வெளியீடு

கண் நல விழிப்புணர்வு
மாத இதழ்

ஆசிரியர்
டாக்டர்.ஜி.நாச்சியார்

ஆசிரியர் குழு
சித்ரா துளசிராஜ்
கோ. முருகராஜ்
திவ்யா ரமேஷ்

இதழ் வடிவமைப்பு
ரா. மீனாட்சி

சந்தா பொறுப்பாளர்
ஜெ. பரிமளா

தொடர்புக்கு :
'கண்ஒளி'
அரவிந்த் கண்
மருத்துவமனை,
1, அண்ணாநகர்,
மதுரை – 625020

மின்னஞ்சல் :
kannoli@aravind.org

# உள்ளே . . .

தலையங்கம் 4

குறைபார்வை – ஓர் அறிமுகம் 5

பெருமூளை பார்வை குறைபாடு (CVI) 6

கருவிகள் 8

பார்வையற்றவர்களும் புத்தகங்களைப் படிக்கலாம் 10

விகாஸ் 11

ஒருபக்க பார்வையிழப்பும் முப்பட்டகமும் 12

வானம் வசப்படும் 14

எல்லாம் சாத்தியம் 15

முயன்றால் முடியாதது இல்லை 16

கண் பரிசோதனை மையங்கள்: இராமநாதபுரம் மாவட்டம் 17

அரவிந்த் இலவச கண் பரிசோதனை முகாம்கள் 18

கண் தான வள்ளல்கள் 22

# தலையங்கம்

கண் ஒளி இதழின் புதிய வடிவம், உங்களை ஈர்த்திருக்கும் என நம்பிக்கையுடன் உள்ளடகத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறோம். அதில் ஒன்று சிறப்பிதழ்களை அவ்வபோது வெளியிடுவது. குறைபார்வை பற்றி விரிவான புரிதலை வாசகர்களிடம் ஏற்படுத்தும் விதத்தில் இந்த இதழை குறைபார்வை சிறப்பிதழாகக் கொண்டு வந்துள்ளோம்.

மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையில் குறைபார்வை ஆலோசனை மையம் இயங்கி வருகிறது. Macular Degeneration, Retinitis Pigmentosa போன்ற பார்வை குறைபாடு காரணமாக நாளடைவில் பார்வையை இழப்பவர்கள் தங்கள் வாழ்வே இருண்டு விட்டதாகத் துவண்டு விடக்கூடாது எனும் நோக்கத்துடன் தேவையான ஆலோசனைகளும் வாழ்வை எதிர்கொள்ளும் வாய்ப்புகளை அறிமுகப்படுத்தவே இந்த மையம் செயல்பட்டு வருகிறது. இக்குறைபார்வை ஆலோசனை மையமானது 1999 ஆம் தொடங்கப்பட்டது. தென் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் அரவிந்தின் குறைபார்வை மையத்தைப் பற்றி அறிந்து பலர் வந்த வண்ணம் இருந்தாலும், தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு இந்த இதழ், புதிய ஜன்னல்களைத் திறக்கும் என்ற நம்பிக்கையில் குறைபார்வை பற்றிய தகவல்களைத் தொகுத்து அளிக்கிறோம்.

குறைபார்வை என்பது இருநிலைகளில் ஏற்படலாம். முதல் வகை (Congenital) பிறவியிலேயே பார்வை குறைபாடு உள்ளவர்கள். இவர்களுக்கு பிறக்கும்போதே பார்வைத் திறன் குறைவாக இருக்கலாம்; மூளையில் உள்ள பார்வை நரம்புகள் சரியாக வளர்ச்சி அடையாமல் இருக்கலாம். இரண்டாவது வகை (Adventitious) என்பது இடைபட்ட நிலையில் பார்வையிழப்பு ஏற்படுதல். விழித்திரை, (Retina), கண் நீர் அழுத்தம் (Glaucoma) ஆகிய நோய் தீவிரமடைந்து சரியாக சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை எனில் பார்வையிழப்பு ஏற்படும். இழந்த பார்வையை மீட்க முடியாது. அந்த நிலையே குறைபார்வை எனப்படும்.

– ***ஆசிரியர் குழு***

## சந்தா செலுத்த...

2 வருடச் சந்தா: ரூ.50/–, 4 வருடச் சந்தா: ரூ.100/–

கண் ஒளி இதழுக்கு சந்தா செலுத்த விரும்புபவர்கள், சந்தாத் தொகையை மணியார்டரில் அனுப்பி வைக்கவும். உங்களது தெளிவான முகவரி, தொலைபேசி எண் மற்றும் அஞ்சல் இலக்க எண்ணையும் குறிப்பிட்டு, 'கண் ஒளி சந்தாவுக்கு' என எழுதவும்.

**முகவரி:** காசாளர், கண் ஒளி, அரவிந்த் கண் மருத்துவமனை,
1, அண்ணா நகர், மதுரை – 625020. தொலைபேசி: 0452–4356500

# குறைபார்வை – ஓர் அறிமுகம்



பிறவியிலேயே குறைபார்வை உள்ளவர்கள், தங்கள் நிலையை உணர்ந்து அதற்கேற்ப தங்கள் வாழ்வை தகவமைத்துக் கொள்வார்கள். இருப்பினும் அவர்களுக்கான மறுவாழ்வு முறைகள், வாய்ப்புகளை அளிக்க வேண்டியது அவர்களது குடும்பம், சமூகம் மற்றும் அரசின் கடமை.


பிறவியிலேயே பார்வை குறைவாக இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கலாம். குறைமாதத்தில் பிறந்த குழந்தையாக இருக்கலாம். ஆட்டிசம் போன்ற சிறப்பு குழந்தைகளாக இருக்கலாம். சில குழந்தைகளுக்கு கண்ணால் பார்ப்பவற்றை மூளையால் உணர முடியாத நிலை ஏற்படலாம் (CVI). இவர்களுக்கு முழுமையான கண் பரிசோதனை செய்யப்படவேண்டும். குறைபார்வை ஆலோசனை மையத்திற்கு கண்டிப்பாக அழைத்துச் செல்ல வேண்டும். அப்போதுதான் சமூகத்துடன் இயல்பாக பழகுவதும் வாழ்வை எதிர்கொள்ளும் நம்பிக்கையும் அவர்களுக்கு கிடைக்கும். இல்லையெனில், வீட்டின் அறைக்குள்ளே முடங்கிவிடுவார்கள்.

குறைமாதத்தில் பிறந்த குழந்தைகளுக்கு விழித்திரை நோய் இருந்து, அதை ஆரம்ப நிலையிலேயே கண்டறியாவிட்டால் அவர்களுக்கு குறைபார்வை ஏற்படலாம். விபத்து ஏற்பட்டு, இரு கண்களும் அடிபட்டு, மூளைக்கு செல்லும் பார்வைநரம்புகள் பாதிக்கப்பட்டால் குறைபார்வை எற்படலாம்.

இடைபட்ட நிலையில் பார்வையிழப்பு ஏற்படுபவர்களின் நிலை சற்று கடினமானதுதான். ஏனெனில் இவர்கள், பார்வை திடீரென குறைந்து, எதையும் பார்க்க முடியாமல் தவிப்பார்கள். பார்த்து பழகியவர்களுக்கு திடீரென பார்வை இல்லை எனில், அவர்களது தன்னம்பிக்கை குறைந்து வெகுவாகக் குறைந்து விடும். பிறரது கேலி, கிண்டலுக்கு ஆளாகிவிடுவோமோ என நினைக்கக்கூடும். பிறர் நம்மீது பரிதாபப்படும் நிலை ஏற்பட்டுவிட்டதாக எண்ணக்கூடும். இவர்களுக்கும் மறுவாழ்வு முறைகள் உள்ளன. இவர்கள், தங்களுக்கு இனிப் பார்வை திரும்ப கிடைக்காது என ஏற்க முதலில் மறுப்பார்கள். வெவ்வேறு மருத்துவமனைகளுக்குச் சென்று, வெவ்வேறு மருத்துவ முறைகளை முயற்சிக்கிறார்கள். இருக்கும் பார்வையுடன் எவ்வாறு இனி வாழ்வை எதிர்கொள்வது என சிந்தித்து, செயல்பட குறைபார்வை ஆலோசனை மையங்கள் உதவுகின்றன.

*– திவ்யா ரமேஷ்*

# பெருமூளை பார்வைக் குறைபாடு (CVI)



## பெருமூளை பார்வைக் குறைபாடு என்றால் என்ன?

கண்களால் பார்க்கக்கூடியவற்றை மூளையால் உணர முடியாத நிலையே பெருமூளை பார்வை குறைபாடு எனப்படும். சிலருக்கு பார்ப்பவற்றை முழுமையாக உணரமுடியாத நிலை ஏற்படலாம். அவர்களால் பார்த்து, புரிந்துகொள்ள முடியாது. பார்ப்பதற்கு ஏற்ப எதிர்வினை ஆற்ற முடியாது. இதனை செயல்பாட்டின் அடிப்படையிலான பார்வையிழப்பு (Functionally Blind) எனக் குறிப்பிடுவார்கள்.

இக்குறைபாடு உள்ள சில குழந்தைகளுக்கு இயல்பான பார்வை இருக்கலாம். கண்ணாடி அணிந்த நிலையிலும் சில குழந்தைகள் இருக்கலாம்; மாறுகண் இருக்கலாம்.

## யாருக்கு இக்குறைபாடு வரலாம்?

மூளையில் அடிபட்ட குழந்தைகள் அல்லது சிறப்புக் குழந்தைகளுக்கு CVI குறைபாடு ஏற்படும். குறைமாதத்தில் பிறந்த குழந்தைகள், நரம்பியல் பாதிப்பு உள்ள குழந்தைகள், வளரும் மூளையில் பாதிப்பு ஏற்பட்ட குழந்தைகள், நரம்பியல் வளர்ச்சியில் தேக்கம் உள்ள குழந்தைகள் (Neuro developmental delay) மற்றும் ஆட்டிசம் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும் CVI ஏற்படலாம். தாயின் கருவில் இருக்கும்போதே குழந்தையின் மூளை போதிய வளர்ச்சி அடையவில்லை என்றாலும் CVI ஏற்படக்கூடும்.

## அறிகுறிகள் என்னென்ன?

படி இறங்குவதில் சிரமம் இருக்கலாம். கூட்ட நெரிசல் உள்ள இடங்களில் சிரமப்படலாம். வகுப்பில் கவனம் செலுத்த முடியாமல் இருக்கலாம். படித்தல், கரும்பலகையில் ஆசிரியர் எழுதுவதைப் பார்த்து எழுதுவதில் சிரமப்படலாம். பொருட்களை கைகளில் வாங்க திணறக்கூடும்.

## எங்கள் குழந்தைக்கு இந்தக் குறைபாடு உள்ளதா என எப்படி அறிந்துகொள்வது?

கற்றுக்கொள்ளும் திறன் குறைவாக உள்ளதாக பள்ளியில் தெரிவித்தாலும் நீங்கள் உணர்ந்தாலும் உங்கள் குழந்தையை CVI பரிசோதனைக்காகக் குழந்தைகளுக்கான கண் மருத்துவரிடம் அழைத்துச் செல்லவும். சிறப்புக்

குழந்தைகளை (Children with special needs), குறைமாதத்தில் பிறந்த குழந்தைகளை, ஆட்டிசம் குறைபாடு உள்ள குழந்தைகளைக் கண்டிப்பாக மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும்.

**CVI குறைபாட்டைக் கண்டறியாவிட்டால் என்ன விளைவுகள் ஏற்படும்?**

ஆரம்பநிலையில் CVI கண்டறியப்படவில்லை எனில் குழந்தைக்கு கல்விகற்பதில் ஆர்வமும் ஈடுபாடும் இல்லை என பள்ளி, சமூகத்தில் தெரிவிக்கக்கூடும். இதனால் குழந்தைகளுக்கு தன்னம்பிக்கை குறையும். நண்பர்களுடன் இயல்பாகப் பழகுவது குறையும்.

**சிகிச்சை முறைகள் என்ன?**

செயல்பாட்டு பார்வை மதிப்பீடை (Functional Vision Assessment) உள்ளடக்கிய முழுமையான கண் பரிசோதனையை குழந்தைகளுக்கான கண் மருத்துவர் மேற்கொண்டு, குழந்தையின் பார்வைத் திறனை மதிப்பிடுவார்.

தொடர்ச்சியான பயிற்சிகள் மூலம் பார்ப்பவற்றை உணர்ந்துக்கொள்ளும் திறன் குழந்தைகளுக்கு கிடைக்கிறது. தங்களது சிரமங்களைக் களைந்து தங்கள் வாழ்வை எதிர்கொள்ளும்படி பயிற்சியளிக்கப்படுவார்கள். ஆரம்ப நிலையிலேயே CVI குறைபாடைக் கண்டறிந்து, அதற்கான சிகிச்சை முறைகளையும் மறுவாழ்வு முறைகளையும் விரைவாகத் தொடங்கிவிடலாம். இதன் மூலம் கூடுதல் இயலாமையையும் தவிர்க்கலாம் (Secondary disability)

**Dr. *சாஹித்யா பாஸ்கரன்* MS. FICO,**
***அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை.***

**குறை பார்வையின் வகைகள்**

**குறை பார்வை உள்ளவர்கள் கீழ்க்கண்ட பாதிப்புகளைச் சந்திக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாவர்.**


- மற்றவர்களுடைய துணையில்லாமல் நடக்க முடியாது.
- அன்றாட வேலைகளைக்கூட செய்யமுடியாத அளவிற்கு பார்வை பாதிக்கப்பட்டிருப்பது
- நோயாளியின் பார்வை வட்டத்தில் கருப்பு வட்டம் தெரிவது
- இரவு நேரத்தில் பார்வைக் குறைவாக இருப்பது.
- பக்கவாட்டுப் பார்வை குறைந்திருப்பது.

இந்த பாதிப்பில் ஏதேனும் ஒன்று இருந்தால் கண் மருத்துவரை அணுகவும். அவரது பரிந்துரையின்படி, குறைபார்வைக்கான மறுவாழ்வு மையத்தை அணுகவும்.

## கருவிகள்


குறைபார்வை உள்ளவர்களுக்கு பயன்படும் விதத்தில் பல கருவிகள் உள்ளன. அவற்றில் முக்கியமான கருவிகள் பற்றி இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

***சிசிடிவி*** (CCTV)



இதனை Closed Circuit Television என்று அழைக்கிறோம். இச்சாதனத்தில் கேமராவானது தொலைக்காட்சி பெட்டியுடன் இணைக்கப்பட்டிருக்கும். இந்த கேமராவின் அடியில் சிறிய அளவிலான எழுத்துகள் உள்ள காகிதத்தை, புத்தகத்தை வைக்கும்போது தொலைக்காட்சி திரையில் உருப்பெருக்கம் செய்து சிறிய எழுத்துகளைப் பெரிய எழுத்துகளாக மாற்றும். குறைபார்வை உள்ளவர்களின் பார்வைத் திறனுக்கு ஏற்ப எழுத்துகளின் அளவை மாற்றி அமைக்கும் வசதி சிசிடிவி கருவியில் உண்டு. சாதாரணமாக பெரும்பாலான புத்தகங்களில் வெள்ளைத் தாளில் கருப்பு மையால் எழுதப்பட்டிருக்கும். இந்தச் சாதனத்தில் கருப்புத்தாளில் வெள்ளை எழுத்துகள் இருப்பது போல மாற்றி அமைக்கும் வசதி இதில் உள்ளது. இந்தச் சாதனத்தைத் தொலைக்காட்சியில் மட்டுமின்றி USB Convertor மூலம் கணினியுடன் இணைத்துக் கொள்ளலாம்.

**வீடியோ பாக்கெட் மெக்னிஃபையர்** (Video Pocket Magnifier)




இந்தக் கருவியை குறைபார்வை உள்ளவர்கள், தான் செல்லும் இடங்களுக்கும் எளிமையாக எடுத்துச் செல்லலாம். சிசிடிவி சாதனத்தின் அத்தனை வசதிகளும் இதில் உள்ளன. கூடுதலாக, இதில் உள்ள கைப்பிடியின் உதவியுடன் எழுதவும் கையொப்பமிடவும் முடியும்.

**எழுதுவதற்கு உதவும் சாதனம்** (Writing Guide)

குறைபார்வை உள்ளவர்களுக்கு நேர்க்கோட்டில் எழுதுவது கடினமானது. இச்சாதனம் கருப்பு நிறத்தில் மடித்து வைக்கப்பட்ட A4 தாளின் அளவிற்கு இருக்கும். படத்தில் காட்டியபடி இதில் உள்ள நீளமான இடைவெளிகளைக் கொண்டு குறைபார்வை உள்ளவர்கள் நேர்க்கோட்டில் எழுத முடியும்.




**கையொப்பம் இட உதவும் சாதனம்** (Signature Guide)
இது, செவ்வக வடிவில் இருக்கும். இதன் நடுப் பகுதியில் ஒரு நீளமான இடைவெளி இருக்கும். இது, நேர்க்கோட்டில் கையொப்பம் இட உதவுகிறது.

**ஸ்மார்ட் கேன்:** (SMART CANE)





பார்வையற்றவர்கள், தங்களது பார்வைக் குறைபாட்டினால் நிறைய சிரமங்களை தங்களது வாழ்வில் எதிர்கொள்கின்றனர். முழுவதுமாக, பார்வையிழந்த மற்றும் நடக்கும்போது பார்வைக் குறைபாட்டினால் சிரமம் உள்ளவர்களுக்கு SMART CANE ஒரு நல்ல தீர்வாக அமையும். CANE என்பது நடப்பதற்கு பயன்படுத்தப்படும் சாதனம் இந்த ஸ்மார்ட் கேன் சாதனத்தைக் கொண்டு ஒரு மீட்டர் தூரத்தில் முழங்காலுக்கு மேல் உள்ள தடைகளை அறியப் பயன்படுகிறது. இந்தச் சாதனத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை பயிற்சியாளர் மூலம் கற்றுத்தரப்படுகிறது.


***குறைபார்வை ஆலோசனை மையம்,***
***அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை***

---

## குறைபார்வை உள்ள மாணவர்கள் மீது வகுப்பறையில் தனிக்கவனம் செலுத்துதல்

1. கரும்பலகையின் அருகில் அமர அனுமதி வழங்குதல்
2. ஜன்னல் வெளிச்சம் மற்றும் மின் விளக்கினால் ஏற்படும் கண் கூச்சத்தைத் தவிர்க்கும் இடத்தில் அமர அனுமதித்தல். வகுப்பில் அவர்களுக்கு வசதியாக உள்ள இடத்தில் அமர அனுமதித்தல்
3. கருப்பு மை பேனாவையோ அச்சாக எழுதக் கூடிய பென்சில்களையோ வகுப்பறையில் பயன்படுத்த அனுமதி அளித்தல்
4. சாதாரண பார்வை உள்ள மாணவர்களுடன் ஒப்பிடும்போது குறைபார்வை உள்ள மாணவர்கள் சற்று தாமதமாகவே படிக்க, எழுத முடியும். இதற்குத் தகுந்தாற்போல் சற்று அதிக நேரம் வழங்குதல். அருகில் உள்ள மாணவர்களைப் பார்த்து வகுப்பில் எழுத அனுமதிக்க வேண்டும்
5. குறைபார்வை கருவிகளை வகுப்பறையில் அவர்கள் பயன்படுத்த ஊக்கப்படுத்துதல்

# பார்வையற்றவர்களும் புத்தகங்களைப் படிக்கலாம்



புத்தகங்களைப் படிப்பதால் அலாதியான இன்பம் கிடைப்பதுடன், அறிவுத்திறனும் கற்பனையும் வளரும். இனி, பார்வையற்றவர்கள் பிரைல், ஆடியோ வடிவிலான புத்தகங்கள் அல்லது மின் புத்தகங்களை மட்டும் சார்ந்திருக்கத் தேவையில்லை. பார்வையற்றவர்களுக்கு பயனளிக்கும் வகையில் அச்சிடப்பட்டப் புத்தகத்தில் உள்ள வரிகளைப் படித்துக்காட்டும் ஆண்டிராய்டு ஆப், டிக்னிஃபை (Digital Nethra for Eyes (DIGNIΦ)). புத்தகத்தின் வரிகளை ஒலி வடிவில் மாற்றி பயனர்களுக்கு கேட்கும் விதத்தில் டிக்னிஃபை அளிக்கிறது.

ஸ்மார்ட் ஃபோனில் டிக்னிஃபை அப்ளிகேஷனை நிறுவ (Install) வேண்டும். டிக்னிஃபைக்கான பிரத்யேகக் கருவியின் கீழே புத்தகத்தை விரித்து வைக்க வேண்டும். கருவியின் மேல்பகுதியில் மொபைல் ஃபோனை சரியான கோணத்தில் வைப்பதன் மூலம் புத்தகத்தின் பக்கங்களை மொபைல் ஃபோன் படம் பிடிக்கும். பார்வையற்றவர்கள் எளிமையாக பயன்படுத்தும் வகையிலும் சிறப்பாக பயனளிக்கும் வகையிலும் இந்தக் கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது.

புத்தகத்தின் பக்கத்தை ஸ்மார்ட் ஃபோன் படம் பிடித்து, அதைப் படிக்கும் வடிவத்திற்கு மாற்றி படித்துக் காட்டும். ஒலியாக மாற்றப்பட்ட புத்தக வரிகளை ஹெட்ஃபோன்கள்/ஸ்பீக்கர்கள் மூலம் கேட்கலாம். புத்தக வரிகளை படம் பிடித்து, உடனுக்குடன் ஒலியாக மாற்றும் வகையில் இந்த ஆப் வடிவமைக்கப்படுள்ளது. ஒரு பக்கத்தின் வரிகளை படித்ததும் அடுத்தப் பக்கத்தைத் திருப்ப வேண்டும் என ஆப் அறிவுறுத்தும். பயனர், பக்கத்தைத் திருப்பியதும் ஆப் படிக்கத் தொடங்கி விடும்.

ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் அச்சிடப்பட்ட புத்தகங்களைப் படித்துக் காட்டுகிறது. பக்கத்தைத் திருப்புவதற்கு வலியுறுத்துகிறது. பக்கத்தைத் திருப்ப, குரல் வழி NVDA உத்தரவுகளையும் புரிந்துக் கொள்ளக்கூடியது. டிக்னிஃபை அப்ளிகேஷனை கூகுள் ப்ளே ஸ்டோரில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் (Mindtree என தேடவும்).

**H. ஜெயசீலி ப்ளோரா**
***குறைபார்வை ஆலோசனை மையம், அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை***

# விகாஸ்



நாம் கற்றுகொள்ளும் விஷயங்களில் 90% கண்களால் பார்த்து உணரக்கூடியவையே. நாம் பார்ப்பவற்றில் மூளையின் பங்கும் உள்ளது. கண்ணால் பார்க்கும் பொருட்களை மூளையால் உணர முடியாத நிலையே Cerebral Visual Impairment (CVI) எனப்படுகிறது. CVI குறைபாட்டால் பாதிக்கப்படுள்ள குழந்தைகளுக்கு பயனளிக்கும் விதமாக 10 செயல் பயிற்சிகளைக் கொண்டுள்ள ஆன்டிராய்டு ஆப் தான் விகாஸ்.

## எவ்வாறு செயல்படுகிறது?

குழந்தைகளின் பெருமூளையை பழக்கப்படுத்த மற்றும், அதன் செயல்பாடுகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் விகாஸ் வடிவமைக்கப்பட்டுள்ளது. குழந்தைக்கு CVI உள்ளதா என்பதைக் கண்டறிய பொது மருத்துவரோ சிறப்புப் பள்ளி ஆசிரியரோ ஆரம்பக் கட்டத்தில் VIKAS ஐப் பயன்படுத்தலாம். பிறகு குழந்தைகளுக்கான கண் மருத்துவரிடம் பரிந்துரைக்கலாம். குழந்தைகளுக்கு பயிற்சியளிக்க பெற்றோர்களும் வீட்டில் VIKAS ஐப் பயன்படுத்தலாம். தொடர் பயிற்சிகளின் மூலம் குழந்தையின் பார்த்துப் புரிந்துகொள்ளும் திறன் மேம்படும்.

## சிறப்பம்சங்கள்

- 10 செயல் பயிற்சிகளும் எளிமையானவை; சுலபமாகப் புரிந்துக்கொள்ளலாம்
- ஒவ்வொரு செயல் பயிற்சிக்கும் முறையான அறிவுறுத்தல்கள் அளிக்கப்பட்டுள்ளன.
- ஆண்டிராய்டு ஆப் மற்றும் நிகழ்நேர பயிற்சிப் பாடங்கள் என இரு வடிவங்களில் விகாஸ் கிடைக்கிறது.
- விகாஸ் மென்பொருளின் ஆங்கில வடிவத்தை கூகுள் ப்ளே ஸ்டோரில் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் (Mindtree என தேடவும்).

MindTree
FOUNDATION

**Dr. *சாஹித்யா பாஸ்கரன்* MS. FICO,**
***அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை.***

# ஒருபக்க பார்வையிழப்பும் முப்பட்டகமும்



பார்க்கும் பார்வையில் இடது அல்லது வலது பார்வை பாதி தெரியாத நிலை, 'ஒருபக்க பார்வையிழப்பு' எனப்படுகிறது. இந்த ஒரு பக்கப் பார்வையிழப்பு கண்ணிலிருந்து மூளைக்குச் செல்லும் ஆப்டிக் கையஸ்மா (Optic Chiasma) என்ற இடத்தில் ஏற்படும் பாதிப்பினால் உண்டாகிறது. இந்த குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்கள் பின்வரும் சிக்கல்களை எதிர்கொள்ளலாம்.

- நோயாளிகள் ரோட்டில் நடக்கும்போது பாதிக்கப்பட்ட பார்வையிழப்பு பகுதியில் வாகனங்கள் வருவதோ ஆட்கள் வருவதோ தெரியாது.
- பாதிக்கப்பட்ட பார்வையிழப்பு பகுதியில் கீழே விழும் பொருட்களை எடுப்பதில் சிரமம் இருத்தல்.
- வாகனங்களை ஓட்டுவதில் சிக்கல் ஏற்படும்.

இந்தப் பிரச்சனைக்கான காரணத்தை கண்டறிய நரம்பியல் மருத்துவரை அணுகி அவர் பரிந்துரையின்படி MRI ஸ்கேன் செய்து தெரிந்து கொள்ளலாம். இப்பிரச்சனை உள்ளவர்கள் தங்களது தினசரி வேலைகளை செய்யும்போதும், ரோட்டில் நடக்கும்போதும் பார்வை தெரியாத பகுதியை நோக்கி தலையைத் திருப்பிப பார்க்க வேண்டியிருக்கும். தலையைத் திருப்பிப் பார்ப்பது என்பது மனித இயல்பு கிடையாது. இவ்வாறு பார்த்து நடக்க வேண்டிய சூழ்நிலையில் இவர்கள் இருப்பதால் மனரீதியாகவும் பாதிக்கப்படுகிறார்கள்.

**முப்பட்டகம்** (Fresnel Prism)

முப்பட்டகமானது ஒரு பிம்பத்தை அதன் நிலையிலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்த்தி காட்டும் தன்மையுடையது. இந்த முப்பட்டகம் ஒரு தாள் போல இருக்கும். ஒரு பக்கம் சொரசொரப்பாகவும் அதன் மறுபக்கம் வழுவழுப்பாகவும் இருக்கும். இந்தக் குறைபாடு உள்ளவர்கள் அணியும் கண்ணாடியில் பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் ஒட்டப்படும். இந்த முப்பட்டக தாளின் வழியாக தலையைத் திருப்பாமல் பாதிக்கப்பட்ட திசையை நோக்கி கண்ணை மட்டும் நகர்த்துவதால் தெரியாத பகுதியில் உள்ள பொருட்கள் தெரிந்த இடத்திற்கு நகர்ந்து தெரியும். இது, பக்கவாட்டில் உள்ள பொருட்களைப் பார்த்து நடக்க உதவும்.

***H. ஜெயசீலி ப்ளோரா***
***குறைபார்வை ஆலோசனை மையம், அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை***

## குறைபார்வை உள்ளவர்கள் கவனிக்க வேண்டியவை

- முதலில், தாங்கள் 'பார்வையை இழந்துவிட்டோம்' என்று எண்ணி நம்பிக்கை இழக்கக்கூடாது.
- குறைபார்வையுள்ள குழந்தைகள் தன்னம்பிக்கையுடன் தங்களுடைய படிப்பில் முன்னேற வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்குப் பெற்றோரும் ஆசிரியர்களும் உறுதுணையாக இருக்க வேண்டும்.
- தனக்கு குறைபார்வை இருப்பதை உணர்ந்தவுடன் கண் மருத்துவரை அணுகி தன் பார்வைக் குறைபாடு பற்றியும் அதனால் ஏற்படும் பாதிப்புகளையும் தெரிந்து கொள்ள வேண்டும்.
- மற்றவர்களுடைய உதவியை எதிர்பார்க்காமல் தன் வாழ்வை எதிர்கொள்ளவும், சமாளிக்கவும் தேவையான ஆலோசனைகளைப் பெறவேண்டும்.
- தங்களைப் போன்ற குறைபார்வை உடையவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் எவ்வாறு தன்னம்பிக்கை உடையவர்களாக வாழ்கிறார்கள் என்பதை அறிந்து பின்பற்றவேண்டும்.





கண் நோய்கள் பற்றியும் அவற்றிற்கான சிகிச்சை முறைகள் பற்றியும் எளிமையாக எடுத்துரைப்பதுடன் 'கண் ஒளி' இதழின் பணி நின்று விடுவதில்லை. தங்களது வாழ்வை சிறப்பாக எதிர்கொள்ள தங்களது குறைகள் தடையாக இல்லை என நிரூபித்து வரும் சிலரது கதைகளை வாசகர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் முழுமையான வழிகாட்டியாக கண் ஒளி திகழ்கிறது. குறைபார்வையுடன் வாழ்வை எதிர்நோக்கி, மிகப் பெரும் உயரத்தை நோக்கி நகர்பவர்கள் ஏராளமானவர்கள் உள்ளனர். அவர்களில் மூன்று நபர்களைப் பற்றி இந்த இதழின் மூலம் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். . .

## வானம் வசப்படும்

மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையில் உள்ள குறைபார்வை ஆலோசனை மையத்திற்கு சில வருடங்களுக்கு முன்பு பத்து மாதங்களே ஆன தனது ரேஷ்மி எனும் குழந்தையை அவரது தாயார் இங்கு அழைத்து வந்தார். அந்தக் குழந்தைக்கு வலிப்பு நோய், ஆட்டிசம் குறைபாடு, மூளை முடக்குவாதம் இருந்தது. அத்துடன் குறை பார்வையும் இருந்தது. பார்வை பெறவேண்டி மருத்துவப் பரிசோதனைகள், சிகிச்சைகள் எனப் பலவற்றை மேற்கொண்ட பிறகு நமது மருத்துவமனைக்கு வந்திருந்தார்.

தினமும் பார்வைப் பயிற்சிகள் (Vision Therapy) தரப்பட்டன. வங்கி ஒன்றில் பணிபுரிந்த அந்தக் குழந்தையின் தாய், தனது குழந்தைக்காக பணியிலிருந்து விலகி குழந்தையுடனே தனது நாட்களைச் செலவிடத் தொடங்கினார். தினமும் ஒரு மணிநேரம் பார்வை பயிற்சி அளிக்கத் தொடங்கிய காலத்தில் ஒரு நாளைக்கு 4–5 முறை அந்தக் குழந்தைக்கு வலிப்பு வரும். மிக மென்மையாக, கவனமாக அக்குழந்தையைக் கையாள வேண்டியிருந்தது.

நாளடைவில் பயிற்சியில் முன்னேற்றம் ஏற்பட்டது. இன்னமும் கூட மாதத்திற்கு ஒருமுறை ரேஷ்மி தொடர் பரிசோதனை, பயிற்சிக்காக வந்து செல்கிறாள். அவளுக்கு ஏழு வயதாகும்போது அணிந்துக் கொள்ளக் கண்ணாடி அளித்தோம். இப்போது அவளுக்கு ஒன்பது வயதாகிறது. அவளால் தனியாக, யார் துணையுமின்றி தானாக நடக்க முடிகிறது. சிறப்புப் பள்ளியில் படிக்க இயலாத நிலையில் இருந்த ரேஷ்மி, தற்போது இயல்பாக உள்ள குழந்தைகள் படிக்கும் பள்ளியில் படிக்கிறாள்.

தற்போது ரேஷ்மி பொருட்களை வித்தியாசப்படுத்திப் பார்க்க, உணர கற்றுள்ளாள். தன்னிடம் பேசும் பிறரைப் பார்த்து, பேசுவதற்கும் கற்றுக் கொண்டுள்ளாள். பிறரைச் சார்ந்திராமல் தனது தேவைகளை ஓரளவு தன்னால்

செய்துக் கொள்ள முடிகிறது. பள்ளியில் தோழிகளுடன், வீட்டிற்கு அருகில் உள்ளவர்களுடன் இயல்பாக அவளால் பழக முடிகிறது.

தன்னால் முடியும் எனும் நம்பிக்கை வந்தவுடனே ரேஷ்மி சாதிக்கத் தொடங்கிவிட்டாள். பிறர் துணையின்றி தானாக நடப்பது, தனது வேலைகளைத் தானே செய்துகொள்வதெல்லாம் அவளது அடுத்தடுத்த சாதனைகள்தான். இத்துடன் அவள் நின்றுவிடப்போவதில்லை. அவள் எட்டிப்பிடிக்க, வானமும் அருகில்தான் உள்ளது.

**H. *ஜெயசீலி ப்ளோரா***
***குறைபார்வை ஆலோசனை மையம், அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை***

## எல்லாம் சாத்தியம்

பார்வையற்ற நிலையில் உள்ள சிலர் தங்கள் வாழ்வே இருண்டு விட்டதென நினைத்து வேதனையில் தவிக்கின்றனர். அவர்களுக்கு மட்டுமின்றி பலருக்கும் பிறக்கும்போதே இரு கண்களும் இன்றி பிறந்த யுவனின் கதை நிச்சயம் தன்னம்பிக்கை அளிக்கக்கூடியதாக இருக்கும்.

யுவனுக்கு நான்கு வயதாகும்போது அவனை மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்து வந்தனர் அவனது பெற்றோர்கள். அப்போது அவனால் நடக்க முடியாது; நடக்கத் தெரியாது என்பதே உண்மையான நிலை. அவனை தூக்கிக் கொண்டுதான் வருவார்கள். யுவனுக்கு சொல்வதைக் கேட்டு செய்யக்கூடியத் திறன் இருந்தது. மற்றக் குழந்தைகளைப் போல இயல்பாக நடந்து கொள்ள முடியாது அவனால். அவனுக்கு தொடர்ச்சியாக தெரபி அளித்தோம். நடப்பது என்றால் என்ன, ஓடுவது என்றால் என்ன, தொட்டுப் பார்த்தல் என்றால் என்ன என ஒவ்வொன்றாக பயிற்சி அளித்தோம். ஒரு வருடத்திற்கு பிறகு அவனது ஐந்தாவது வயதில் சிறப்புப் பள்ளியில் சேர்ந்தான்.

தற்போது அவனுக்கு 14 வயதாகிறது. ஒன்பதாம் வகுப்பு படிக்கிறான். அவன் தற்போது படிப்பது ஒருங்கிணைந்த பள்ளியில் (Integrated School). ஒருங்கிணைந்த பள்ளி என்பது இயல்பாக உள்ள குழந்தைகளும் சிறப்புக் குழந்தைகளும் இணைந்து படிக்கும் பள்ளியாகும். ஒருங்கிணைந்த பள்ளியில் பிரைலி புத்தகங்கள் இருக்காது. பார்வயற்றவர்களுக்கான பள்ளியில்தான் அவை இருக்கும். எனவே யுவன், பள்ளிக்கு மடிக்கணினி (Laptop) ஒன்றை எடுத்துச் செல்கிறான். பள்ளிப் புத்தகங்கள், மின்புத்தகங்களாகக் கிடைப்பதால் மடிக்கணினி துணை கொண்டு படிக்கிறான். வீட்டுப்பாடத்தையும் மடிக்கணினியின் உதவியுடனே செய்கிறான். பிறரைச் சார்ந்து இருக்க வேண்டும் எனும் நிலை யுவனுக்கு தற்போது இல்லை. கணினியைப் பயன்டுத்துகிறான். தனது கற்றல் திறனை அதன் மூலம் பெரிதும் வளர்த்துக்

கொண்டு வருகிறான். தொழில் நுட்பமும் வாய்ப்புகளும் பல்கிப் பெருகி வரும் இக்காலக்கட்டத்தில் யுவனைப் போல அனைவரும் தடைக் கற்களைப் படிக்கட்டுகளாக மாற்றி முன்னேற வேண்டும்.

**Dr. *சாஹித்யா பாஸ்கரன்* MS. FICO, *அரவிந்த்-மதுரை.***

## முயன்றால் முடியாதது இல்லை

பள்ளிப் பருவத்திலேயே பார்வைக் குறைபாடு காரணமாக சாதாரணமாகப் பொருட்களைப் பார்க்க முடியாமல் பிரபாவதி எனும் மாணவி அவதியுற்றாள். கண் மருத்துவமனையில் கண் பரிசோதனை செய்ததில் Macular Degeneration எனும் குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டது. பார்வை படிப்படியாகக் குறையும் என்பதையும் தெளிவான பார்வை கிடைக்க வாய்ப்பில்லை என்பதையும் அறிந்த பிரபாவதி குடும்பம் என்ன நேர்ந்தாலும் பிரபாவதியின் கல்வி தடைப்படக் கூடாது எனும் உறுதியுடன் இருந்தது.

பன்னிரெண்டாம் வகுப்பில் 900க்கும் அதிகமான மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சியடைந்தாள். கல்லூரிக் காலத்திலும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள் உதவியுடன் தனது இளங்கலை படிப்பை முடித்து முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்தாள். பள்ளிக்காலத்தில் தானே தேர்வு எழுதிய பிரபாவதி, கல்லூரி படிப்பில் Scribe எனப்படும் எழுத்தரின் துணை கொண்டு தேர்வுகளை எழுதி தேர்ச்சியடைந்தாள். முதுகலைப் படிப்பிற்காக MBA எனும் மேலாண்மைக் கல்வியைத் தேர்ந்தெடுந்து அதிலும் சிறப்பாகத் தேர்ச்சியடைந்தாள்.

பொறுப்புடன் படித்த பிரபாவதிக்கு படிப்புக்குப் பிறகு என்ன செய்வது என மிகவும் குழப்பமடைந்தாள். MBA வரை படித்தாகி விட்டது. இனி தோழிகளைப் போல நாமும் வேலைத் தேடுவோம். ஆனால் நமக்கு தனியார் துறைகளில் எப்படி வேலை கிடைக்கும். அரசுத் துறைகளில் வேலை கிடைக்க நுழைவுத் தேர்வுகளில் பங்கேற்று தேர்ச்சியடைய வேண்டுமே. நுழைவுத் தேர்வுகளுக்கு எப்படி தயாராவது பெற்றோர்களுக்கு பாரமாக இருந்து விடுவோமா என பலவிதமாக சிந்தித்து, தனது அறையில் தனித்து இருக்கத் தொடங்கினாள்.

மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு பிரபாவதியை அழைத்து வந்து குறைபார்வை ஆலோசனை மையத்தில் கணினி பயிற்சி அளிக்கப்பட்டது. அரசு வேலைகளுக்கு சிறப்புத் தகுதியுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதையும், அரசுத் தேர்வுகளில் தேர்ச்சி அடைய உதவும் பாடப் புத்தகங்கள் ஒலி வடிவில் எந்தக் கணினி மூலமாகவும் கேட்டுப் பயன்பெறலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டது. தற்போது TNPSC தேர்விற்காகத் தீவிரமாகத் தயாராகி வருகிறாள்.

***– வெங்கடேஷ், குறைபார்வை ஆலோசனை மையம்,***
***அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை***

# கண் பரிசோதனை மையங்கள்: இராமநாதபுரம் மாவட்டம்

| 2018 செப்டம்பர் மாதம் வரை இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அரவிந்த் கண் பரிசோதனை மையங்களில் சிகிச்சை எடுத்துக்கொண்டவர்களின் எண்ணிக்கை | |
|---|---|
| மொத்த வெளிநோயாளிகள் | 1,01,010 |
| கண்ணாடி வாங்கியவர்கள் | 18,877 |
| கண்புரை அறுவை சிகிச்சை செய்து பயன் பெற்றவர்கள் | 3,259 |
| சிறப்பு பிரிவுகளில் சிகிச்சை செய்து பயன் பெற்றவர்கள் | 4,259 |

**இராமேஸ்வரம்**
மேற்கு தெரு, கோசாமி மடம்
இராமேஸ்வரம் – 623526
இராமநாதபுரம் மாவட்டம்
தொலைபேசி: 04573 222255

**ஆர்.எஸ்.மங்கலம்**
24/2,பரமக்குடி ரோடு
ஸ்டேட் பேங்க் எதிர்புறம்
ஆர்.எஸ்.மங்கலம்–623525
தொலைபேசி: 04561–241241

**முதுகுளத்தூர்**
14/16, சுவாமிகள் மடம் தெரு
டி.இ.எல்.சி (TELC) பள்ளி பின்புறம்
அரசு மருத்துவமனை அருகில்
முதுகுளத்தூர் – 623704
தொலைபேசி: 04576–221221

**கமுதி**
அரசு மருத்துவமனை எதிர்புறம்
அருப்புக்கோட்டை–623603
இராமநாதபுரம் மாவட்டம்
தொலைபேசி: 04576 224225

சமீபத்தில் தொடங்கப்பட்டுள்ள கண் பரிசோதனை மையங்கள்:

**எட்டயாபுரம்**
1, ஆயிர வைசிய வணிக வளாகம்,
68–B, விருத்தாசலம் மெயின் ரோடு,
மேல் புவனகிரி,
கடலூர் மாவட்டம் – 608601,
தொலைபேசி எண் : 04144–241000

**சாணார்பட்டி**
113, மெயின் ரோடு,
பள்ளிவாசல் எதிர்புறம்,
சாணார்பட்டி – 624304,
தொலைபேசி எண் : 9498840041

# அரவிந்த் கண் மருத்துவமனை நடத்தும் இலவச கண் பரிசோதனை முகாம்கள் பற்றிய விவரங்கள்

| தேதி | முகாம் நடைபெறும் ஊர், மாவட்டம் (மா) | முகாம் நடைபெறும் இடம் | முகாம் நடத்த உதவுபவர், மொபைல் |
|---|---|---|---|
| 16.11.18 | பொள்ளாச்சி, கோயமுத்தூர் (மா) | லயன்ஸ் ஹால் | லயன்ஸ் சங்கம் 9994611911 |
| 17.11.18 | கடவூர், கரூர் (மா) | இன்பசேவா சங்கம் | இன்பசேவா சங்கம் டிரெயினிங்செல் 9042261153 |
| 17.11.18 | K.R. நகர், மைசூர் (மா) | குரு பவன் | B.V.P |
| 17.11.18 | மாயனூர், காலிகட் (மா) | மாதரஷா ஹால் | முஸ்லீம் சர்வீஸ் சொசைட்டி |
| 17.11.18 | M.ரெட்டியபட்டி, விருதுநகர் (மா) | அரசு ஆண்கள் மே.நி.பள்ளி | சர்வோதயா மியூச்சுவல் பெனிபிட் டிரஸ்ட் 9543949993 |
| 17.11.18 | ஆதனூர், சிவகங்கை (மா) | பஞ்சாயத்து யூனியன் ந.நி.பள்ளி | ஈதலை அறம் பவுண்டேஷன் 9786087955 |
| 17.11.18 | அழகர்சாமிபுரம், தேனி (மா) | கோவிந்தன், மயில்தாயம்மாள் மண்டபம் | லயன்ஸ் சங்கம் |
| 17.11.18 | அக்கூர் முக்குட்டு, நாகை (மா) | அன்பு திருமண மண்டபம் | ரோட்டரி சங்கம் |
| 17.11.18 | புதுப்பாளையம், திருவண்ணாமலை (மா) | பஞ்சாயத்து யூனியன் பள்ளி | லயன்ஸ் சங்கம் |
| 17.11.18 | மண்டாராகுப்பம், கடலூர் (மா) | NLC அரசு ஆண்கள் மே.நி.பள்ளி | திரு.உதயசெல்வன் |
| 18.11.18 | திருப்பூர் (மா) | லயன்ஸ் ஹால் | லயன்ஸ் சங்கம் 9442190045 |
| 18.11.18 | தென்காசி, திருநெல்வேலி (மா) | சுப்புராஜ் மஹால் | BSSSSO 9842132442 |
| 18.11.18 | கொள்ளேகால், சாம்ராஜ்நகர் (மா) | அரசு தாலூகா தலைமை மருத்துவனை | V&M பவுண்டேஷன் பெங்களூர் 9343968272 |
| 18.11.18 | பட்டம்பி, பாலக்காடு (மா) | வியாபாரி பவன் டிரஸ்ட் | சேம்பர் ஆப் காமர்ஸ் 9846781688 |
| 18.11.18 | ஆத்திகுளம், மதுரை (மா) | இராமகிருஷ்ணா மடம் | இராமகிருஷ்ணா மடம் 9487493525 |
| 18.11.18 | செய்யார், திருவண்ணாமலை (மா) | அரசு பெண்கள் மே.நி.பள்ளி | கௌதம் பைனான்ஸ் |
| 18.11.18 | வடகரா, பாலக்காடு, (மா) | பஞ்சாயத்து யூனியன் தொடக்கப்பள்ளி | லயன்ஸ் சங்கம் |

| | | | |
|---|---|---|---|
| 18.11.18 | சின்ன அனுப்பானடி, மதுரை (மா) | பழனியப்பா ந.நி.பள்ளி | கிஷோர் ஏஜன்சிஸ் 9843059050 |
| 18.11.18 | கம்பம், தேனி (மா) | குலாளர் திருமண மண்டபம் | ஜாய் டிராவல்ஸ் |
| 18.11.18 | மதுக்கூர், தஞ்சாவூர் (மா) | அரசு மே.நி.பள்ளி | லயன்ஸ் சங்கம் 9843897832 |
| 18.11.18 | சிவகாசி, விருதுநகர் (மா) | அரசன் திருமண மண்டபம் | ஸ்ரீசத்யசாய் சேவா சமிதி 9894416135 |
| 18.11.18 | விருதுநகர் (மா) | திருவள்ளுவர் வித்யாசாலை | லயன்ஸ் சங்கம் 9443153554 |
| 18.11.18 | மணலூர்பேட்டை, விழுப்புரம் (மா) | பஞ்சாயத்து யூனியன் நடு.நி.பள்ளி | லயன்ஸ் சங்கம் |
| 18.11.18 | மீன்சுருட்டி, அரியலூர் (மா) | அரசு ஆண்கள் மே.நி.பள்ளி | லயன்ஸ் சங்கம் |
| 18.11.18 | கொசவபட்டி, திண்டுக்கல் (மா) | வின்சென்ட் டீ–பால் சொசைட்டி ஹால் | வின்சென்ட் டீ–பால் சொசைட்டி 9688407773 |
| 18.11.18 | சீர்காழி, நாகை (மா) | LMC பள்ளி | நாராயணா ஜீவல்லர்ஸ் |
| 18.11.18 | மோகனூர், நாமக்கல் (மா) | அரசு பெண்கள் மே.நி.பள்ளி | லயன்ஸ் சங்கம் 9442334772 |
| 21.11.18 | கபிஸ்தலம், தஞ்சாவூர் (மா) | பாரதி திருமண மண்டபம் | லயன்ஸ் சங்கம் 9443786993 |
| 22.11.18 | தேவராயன்பாளையம், திருப்பூர் (மா) | AKVN மருத்துவமனை | சென்னை சில்க்ஸ் 8508328773 |
| 22.11.18 | இராசிங்கபுரம், தேனி, (மா) | சமுதாயக்கூடம் | லயன்ஸ் சங்கம் |
| 22.11.18 | மயிலாடுதுறை, நாகை (மா) | S.S.ஜெயின் சங்கம் பில்டிங் | மஹாராஜா P.C.கைலாஷ் சந்த் ஜெயின் |
| 24.11.18 | ஹன்சூர், மைசூர் (மா) | SLV கம்யூனிட்டி ஹால் | திரு.சின்னசாமி&முருகேசன் குடும்பம் 9448352929 |
| 24.11.18 | T. கல்லுப்பட்டி, மதுரை (மா) | அய்யனார் கல்யாண மஹால் | நகர்நல கமிட்டி 9842175940 |
| 24.11.18 | வளநாடு, திருச்சி (மா) | இராமரத்தின கல்யாணமஹால் | Dr.VNL டிரஸ்ட் 9965560142 |
| 24.11.18 | மங்கநல்லூர், நாகை (மா) | K.S.O. உயர்பள்ளி | லயன்ஸ் சங்கம் |
| 24.11.18 | முருகன்குடி, கடலூர் (மா) | பஞ்சாயத்து யூனியன் பள்ளி | இந்தியா சிமெண்ட் தளவாய் |
| 25.11.18 | ஊட்டி, நீலகிரி (மா) | CSI ஹோபர்ட் பள்ளி | ரோட்டரி சங்கம் 9442109100 |
| 25.11.18 | மலையூர், புதுக்கோட்டை (மா) | அரசு மே.நி.பள்ளி | ரோட்டரி சங்கம் 9788077580 |
| 25.11.18 | பரமத்தி வேலூர், நாமக்கல் (மா) | பஞ்சாயத்து யூனியன் ந.நி.பள்ளி | லயன்ஸ் சங்கம் 9842751975 |

| | | | |
|---|---|---|---|
| 25.11.18 | கும்பகோணம், தஞ்சாவூர் (மா) | சரஸ்வதி பாடசாலை | கும்பகோணம் ஹோஸ்ட் 9443116356 |
| 25.11.18 | பண்ருட்டி, கடலூர் (மா) | திருவள்ளுவர் பள்ளி | ஆரிய வைசிய சமூகம் |
| 25.11.18 | மல்லசமுத்திரம், நாமக்கல் (மா) | பஞ்சாயத்து யூனியன் ந.நி.பள்ளி | லயன்ஸ் சங்கம் 9944599046 |
| 25.11.18 | T. சுப்புரலாபுரம், தேனி (மா) | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி | தேனி வைகை அரிமா சங்கம் |
| 25.11.18 | உத்தப்பநாயக்கனூர், மதுரை (மா) | ஜெயசீலன் மெமோரியல் மெ.பள்ளி | லயன்ஸ் சங்கம் 9443052419 |
| 25.11.18 | காரைக்கால், பாண்டிச்சேரி (மா) | அரசு மே.நி.பள்ளி | ஆதிபராசக்தி மன்றம் |
| 25.11.18 | நெடுங்குணம், திருவண்ணாமலை (மா) | அரசு மே.நி.பள்ளி | M.S. ஜீவல்லர்ஸ் |
| 27.11.18 | வடலூர், கடலூர் (மா) | OPR குருகுலம் பள்ளி | சுத்த சன்மார்க்க நிலையம் |
| 29.11.18 | ஜி.உசிலம்பட்டி, தேனி (மா) | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி | தேனி வைகை அரிமா சங்கம் |
| 1.12.18 | தருமபுரி (மா) | ரோட்டரி ஹால் | ரோட்டரி சங்கம் 9842761659 |
| 1.12.18 | சிந்தாமணி, திருநெல்வேலி (மா) | R.C. பிரைமரி பள்ளி | ராஜகோபால் நாயக்கர் டிரஸ்ட் 9865493488 |
| 1.12.18 | சிவகங்கை (மா) | ஸ்ரீசாய் பாலமந்திர் நர்சரி பள்ளி | திரு.S.K.S.குமார் 9842407420 |
| 1.12.18 | செங்கம், திருவண்ணாமலை (மா) | கணேசர் திருமண மண்டபம் | கணேசர் குரூப்ஸ் |
| 2.12.18 | சாம்ராஜ் நகர் (மா) | அரசினர் மருத்துவமனை | DBCS சாம்ராஜ் நகர் 9945228015 |
| 2.12.18 | வடசேரி, கன்னியாகுமரி (மா) | SMRV மே.நி.பள்ளி | BSSSSO 9578678075 |
| 2.12.18 | கொப்பம், பாலக்காடு (மா) | லயன்ஸ் பள்ளி பாலக்காடு | லயன்ஸ் சங்கம் 9349458196 |
| 2.12.18 | திருப்பரங்குன்றம், மதுரை (மா) | மாதா அமிர்தானந்தமயி மடம் | மாதா அமிர்தானந்தமயி மடம் 9443337080 |
| 2.12.18 | மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் (மா) | ஜெயின் சங்கம் பில்டிங் | ஜெயின் சங்கம் 9865789137 |
| 2.12.18 | கோபிசெட்டிப்பாளையம், ஈரோடு (மா) | சின்ன வைரவிழா எலிமெண்டரி பள்ளி | லயன்ஸ் சங்கம் 9791966759 |
| 2.12.18 | அறந்தாங்கி, புதுக்கோட்டை (மா) | ஓம் சக்தி மன்றம் | அய்யப்பா சேவா சங்கம் 9442513641 |
| 2.12.18 | திருவண்ணாமலை (மா) | கார்மெல் மெ.பள்ளி | சாயர் ஜீவல்லர்ஸ், லயன்ஸ் சங்கம் |

| | | | |
|---|---|---|---|
| 2.12.18 | சேத்தியாதோப்பு, கடலூர் (மா) | பஞ்சாயத்து யூனியன் பள்ளி | லயன்ஸ் சங்கம் |
| 5.12.18 | கன்னியாகுமரி, (மா) | விவேகானந்த கேந்திரா ஹால் | விவேகானந்த கேந்திரா 9486030438 |
| 6.12.18 | தேவராயன்பாளையம், திருப்பூர் (மா) | AKVN மருத்துவமனை | சென்னை சில்க்ஸ் 8508328773 |
| 8.12.18 | சத்தியமங்கலம், ஈரோடு (மா) | ரோட்டரி ஹால் | ரோட்டரி சங்கம் சத்தி 9943011211 |
| 8.12.18 | தருமபுரி, (மா) | சந்திர பாலசுப்பிரமணியம் மெ.பள்ளி | ஹேமலதாடிரஸ்ட் 9942253585 |
| 8.12.18 | நஞ்சன்கூடு, மைசூர் (மா) | டவுன் டென்னிஸ் கிளப் | டவுன் டென்னிஸ் கிளப் 9019126767 |
| 8.12.18 | உடுமலைப்பேட்டை, திருப்பூர் (மா) | லயன்ஸ் ஹால் | லயன்ஸ் சங்கம் 9894623625 |
| 8.12.18 | தோகைபாடி, விழுப்புரம் (மா) | வள்ளல் MDS மஹால் | வள்ளல் MDS டிரஸ்ட் |
| 8.12.18 | கண்ணமங்கலம், திருவண்ணாமலை (மா) | குமாரர்ஆச்சாரி திருமண மண்டபம் | லயன்ஸ் சங்கம் |
| 9.12.18 | R.R. நகர், விருதுநகர் (மா) | ஸ்ரீராம் பிரைமரி பள்ளி | ராம்கோ சிமெண்ட் 9994497864 |
| 9.12.18 | ஈரோடு (மா) | செங்குந்தர் ஆண்கள் மே.நி.பள்ளி | லயன்ஸ் சங்கம் 9443405016 |
| 9.12.18 | குமாரலிங்கம், திருப்பூர் (மா) | பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளி | வேங்கடலெட்சுமி மில் |
| 9.12.18 | ஆத்தூர், சேலம் (மா) | T.V.சங்கம் திருமண மண்டபம் | லயன்ஸ் சங்கம் 9443863476 |
| 14.12.18 | பொள்ளாச்சி, கோயமுத்தூர் (மா) | லயன்ஸ் ஹால் | லயன்ஸ் சங்கம் 9994611911 |
| 15.12.18 | கடவூர், கரூர் (மா) | இன்பசேவா சங்கம் | இன்பசேவா சங்கம் டிரெயினிங்செல் 9042261153 |
| 15.12.18 | காஞ்சி, திருவண்ணாமலை (மா) | அரசு மே.நி.பள்ளி | லயோலா அகாடமி |
| 15.12.18 | T.பழூர், அரியலூர் (மா) | அரசு மே.நி.பள்ளி | லயன்ஸ் சங்கம் |



*ஒவ்வொரு மாதமும் 10, 11 தேதிகளில் கண் ஒளி இதழ்களை 15000க்கும் மேற்பட்ட சந்தாதாரர்களின் முகவரிகளுக்கு முறையாகச் சரிபார்த்த பின்னரே தபாலில் அனுப்பி வைக்கிறோம். இருப்பினும் வெகு சில சந்தாதாரர்கள் தங்களுக்கு 'கண் ஒளி' இதழ்கள் சரிவர கிடைப்பதில்லை என்றும், ஒரு மாதம் வரும் இதழ் மறு மாதம் வருவதில்லை என்றும் புகாரளிக்கின்றனர். இதழ் கிடைக்கவில்லை எனில் உங்கள் ஊரில் உள்ள தபால் நிலையத்தில் புகாரளிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். மேலும் உங்கள் பகுதி அஞ்சல்துறை பணியாளரிடம் இதழைத் தவறாமல் விநியோகிக்கும்படி கோரவும்.* ***– கண் ஒளி' ஆசிரியர் குழு.***

# கண் தானம் செய்த வள்ளல்கள்

## அரவிந்த் – பாண்டிச்சேரி

## ஜூலை-2017

பெருமாயி (75) - சின்னசேலம்.
வசந்தா (75) - புவனகிரி.
ஜெயலெட்சுமி (80) - கள்ளக்குறிச்சி.
திருநங்கை.ஆஷிகா (25) - பாண்டிச்சேரி.
ஐய்யனார் (40) - பாண்டிச்சேரி.
சக்திவேல் (73) - பொறையார்.
பிரபாவதி (25) - பாண்டிச்சேரி.
ஞாணன் (56) - பாண்டிச்சேரி.
வசந்தகோகிலம் (69) - புவனகிரி.
பாப்பாத்தி அம்மாள் (90) - சின்னசேலம்
கண்ணன் (85) - கள்ளக்குறிச்சி.
குப்புச்சாமி (41) - பாண்டிச்சேரி.
தாவாயியம்மாள் (75) - விழுப்புரம்.
நற்குணம் (74) - கள்ளக்குறிச்சி.
தெய்வாணை (73) - சீர்காழி.
குப்பம்மாள் (58) - பண்ருட்டி.
மணிமேகலை (60) - நாமக்கல்.
மோகன் (72) - சிதம்பரம்.
ஆறுமுகம் (38) - பாண்டிச்சேரி.
ராமசாமி (45) - கடலூர்.
பரிமளா (60) - விழுப்புரம்.
சரவணன் (47) - சிதம்பரம்.
சின்னச்சாமி கவுண்டர் (75) - சின்னசேலம்.
ராஜாத்தி அம்மாள் (86) - மயிலாடுதுறை.
கிருஷ்ணதாஸ் (78) - கடலூர்.
கஸ்தூரி (76) - பாண்டிச்சேரி.
பிரேமநாதன் (60) - புவனகிரி.
செல்வகணபதி (73) - கடலூர்.
பழனிவேல் (61) - விருதாச்சலம்.
மாணிக்கம் (95) - கடலூர்.
முத்துக்குமரன் (35) - பாண்டிச்சேரி.
தியாகுதேவி (98) - புவனகிரி.
ராமச்சந்திரன் (87) - திண்டிவனம்.
சரஸ்வதி (78) - கச்சிராயபாளையம்.

**2018 ம் ஆண்டில் நவம்பர் மாதம் (30.10.18 வரை) நமது மதுரை ரோட்டரி அரவிந்த் அகில உலக கண் வங்கி மூலம் கண்களைத் தானமாகப் பெற்று கண்ஒளி பெற்றவர்களின் எண்ணிக்கை: 958**

கண்தானம் செய்வதற்கு எந்த வயது வரம்பும் இல்லை. அதைப் பற்றிய விழிப்புணர்வை அளிக்கவே கண்தானம் செய்தவர்களின் வயதையும் குறிப்பிட்டுள்ளோம்.

கண்தானம் பற்றிய தகவல்களைத் தெரிந்துகொள்வதற்கு, தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்

**அரவிந்த் கண் வங்கிகள்**

மதுரை – 0452–435 6100
திருநெல்வேலி – 0462–4356100
கோயம்புத்தூர் – 0422–4360400
பாண்டிச்சேரி – 0413–2619100

**அரவிந்த் கண் சேகரிப்பு மையங்கள்**

திண்டுக்கல் – 0451–2448100
தேனி – 04546–252658
சேலம் – 0427–2356100

**அரவிந்த் கண்தான மையம்**

கும்பகோணம் – 98428 20007

**கூடுதல் விவரங்களுக்கு**

www.aravind.org/default/servicescontent/Eyebanks

# ARAVIND OPTICALS

## அரவிந்த் ஆப்டிகல்ஸ்

- புரொக்ரஸிவ் லென்ஸ்கள்
- பிளாஸ்டிக் லென்ஸ்கள்-லேசான, உடையாத லென்ஸ்கள்
- பிரதிபலிப்பு இல்லாத கண்ணாடிகள்
- கீறல் விழாத கண்ணாடிகள் மற்றும் ஏராளமான அழகிய ஃபிரேம்கள்

## தரமான கண் கண்ணாடிகள் வாங்க எங்களை அணுகுங்கள்










அரவிந்த் ஆப்டிகல்ஸ்
அரவிந்த் கண் மருத்துவமனைகள்

மதுரை | திருநெல்வேலி | கோயம்புத்தூர் | பாண்டிச்சேரி | சேலம் | சென்னை
தேனி | திருப்பூர் | திண்டுக்கல் | தூத்துக்குடி | உடுமலைப்பேட்டை | கோயம்புத்தூர் சிட்டி சென்டர்



# கண்கள் பார்ப்பதை மூளை உணர்கிறது



**90%**

மூளைக்கு செல்லும்
தகவல்களில் நாம் பார்க்கும்
காட்சிகள் மூலமாகவே செல்கின்றன

**Registered Number : TN/MA/ 14/2018-2020, RNI No : TNTAM /2000/912**
**Date of publishing : 5th November 2018, Date of posting : 10, 11th November 2018**
**Posted at BPC, Madurai**
*Owned and published by Dr. G. Natchiar from Aravind Eye Hospital, 1, Anna Nagar, Madurai - 625 020 and Printed by N. Seshadri at Graphico, No, 172, Vakil New Street, Simmakkal, Madurai - 625 001.*
*Editor: Dr. G. Natchiar / Annual Subscription Rs.25/-*